# அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6

## பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு செப்டம்பர்/அக்டோபர் 2017

## தேர்வர்கள் தங்களது தேர்வு முடிவினை தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள் குறித்தான

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற, செப்டம்பர்/அக்டோபர் 2017 பத்தாம் வகுப்புத் துணைப் பொதுத் தேர்வெழுதிய தனித்தேர்வர்கள் (தட்கல் தனித்தேர்வர்கள் உட்பட) தேர்வு முடிவினை, தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாகவே **26.10.2017–ம் தேதி (வியாழக்கிழமை) பிற்பகல்** முதல் தாங்களே இணையதளத்திலிருந்து தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

**அதற்கான வழிமுறைகள் பின்வருமாறு:**

1. தனித்தேர்வர்கள் வருகிற **26.10.2017 பிற்பகல்** முதல் தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை www.dge.tn.nic.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன்

   **" Provisional Mark Sheet**
   **SSLC Result – September 2017"**

   என தோன்றும் வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்ததேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து, தமது தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

செப்டம்பர்/அக்டோபர் 2017 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுக்கான மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு **31.10.2017 (செவ்வாய் கிழமை) மற்றும் 01.11.2017 (புதன் கிழமை)** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**<u>மறுகூட்டல் (Re-totalling) கட்டணம் :</u>**

| | | |
|---|---|---|
| இருதாட்கள் கொண்ட மொழிப்பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் – கணிதம், அறிவியல், சமூக அறிவியல் (ஒவ்வொன்றிற்கும்) | – | ரூ.205/– |
| விருப்ப மொழிப்பாடம் | – | ரூ.205/– |

விண்ணப்பித்தபின் வழங்கப்படும் ஒப்புகைச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் மறுகூட்டல் முடிவுகள் பற்றி அறிய இயலும்.

ஒம்/–

**அரசுத் தேர்வுகள் இயக்குநர்**

**<u>இடம் :</u> சென்னை–600 006.**

**<u>நாள் :</u> 26.10.2017**